# திருமழிசையாழ்வார்
# வாழி திருநாமம்

அன்புடன் அந்தாதி தொண்ணூற்றாறு உரைத்தான் வாழியே
அழகாரும் திருமழிசை அமர்ந்த செல்வன் வாழியே
இன்பமிகு தையில் மகத்து இங்குதித்தான் வாழியே
எழில் சந்தவிருத்தம் நூற்றிருபது ஈந்தான் வாழியே
முன்புகத்தில் வந்துதித்த முனிவனார் வாழியே
முழுப் பொன்னிப் பெருக்கெதிர் செல் முதிர் கவியோன் வாழியே
நன்புவி நாலாயிரத்து எழுநூறு இருந்தான் வாழியே
நங்கள் பத்திசாரன் இரு நற்பதங்கள் வாழியே

---